## In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 10/2020** **Date:18.08.2025**

**(PW1)- அருள் டின்டோசிங்**

**1** ம் பிரதிவாதிதரப்பு குறுக்கு விசாரணை

1. எனது பூர்வீகம் சித்தன் தோப்பு என்றால் சரிதான். எனதுகுடும்ப வீடு சித்தன் தோப்பில் உள்ளது என்றால் சரிதான். நான் எந்த பிரிவில் எந்த ஊரில் பொறியாளராக வேலை பார்க்கிறேன் என்றால் சென்னையில் உள்ள Accenture நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன். எனது மாத வருமானம் எவ்வளவு என்றால் சுமார் 80,000 இருக்கும். ரோமன் கத்தோலிக்க திருச்சபையில் வழிப்பாட்டு தலங்களை ஜெபக்கூடம், ஆலயம், மெட்டாசன ஆலயம், திருத்தலம் மற்றும் பெருங்கோவில் என தகுதி நிலைக்கேற்ற வாறு பிரித்துள்ளனா் என்றால் சரிதான். அதனடிப்படையில் சித்தன் தோப்பில் இருப்பதும் கண்டன் விளையில் உள்ள பங்கும் ஆலயம் என்றால் சரிதான்.

2. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் தனிப்பட்ட முறையில் எந்த விரோதமுமில்லையென்றால்சரிதான். சித்தன் தோப்பு ஆலயத்திலிருந்து சுமார் 6 முதல் 7 கிலோ மீட்டர் தொலைவில் திருத்தலங்கள் உள்ளது என்றால் சரிதான். குழித்துறை மறைமாவட்ட திருச்சபையானது திருச்சபை சட்டம் மற்றும் திருச்சபை சட்டத்தை முதன்மையாக கொண்டு குழித்துறை மறைமாவட்ட சட்டம் முதன்மையாக உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன சட்டங்களை அடிப்படையாக வைத்து குழித்துறை மறைமாவட்ட மேய்ப்பு பணிப்பேரவை உள்ளது என்றால் சரிதான். திருச்சபையால் வகுக்கப்பட்ட திருவருட்சாதனங்கள் 7 என்றால்சரிதான். அதில் ஒன்று ஞானஸ்நானம் என்றால் சரிதான். அது திருமுழுக்கு என்றும் கூறுவார்கள் என்றால் சரிதான்.

3. பங்கு குரு என்பவா் திருச்சபை சட்டப்படி மறைமாவட்ட ஆயரால் நியமிக்கப்படும் ஒரு போதகா் என்றால் சரிதான். அதனடிப்படையில் 22.05.2016 முதல் சித்தன் தோப்பு அலங்கார அன்னை ஆலயத்திற்கு 1ம் பிரதிவாதி ஆயரால் பங்கு குருவாக நியமிக்கப்பட்டாா் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சித்தன் தோப்பு ஆலயத்தில் பங்கு குருவாக வந்த நாள் முதல் அவா் இடமாற்றம் செய்யப்பட்ட நாள் வரை அவா் மீது எந்த குற்றச்சாட்டுகளும் கிடையாது என்றால் எனக்கு தெரிந்து எதுவும்

இல்லை. தற்போது அவர் பதவி உயர்வு பெற்று காரங்காடு வட்டார முதல்வராக பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான்.

4. புனித திருச்சபை குடும்பம் என்பது கணவன், மனைவி, குழந்தைகள் சேர்ந்தது என்றால் சரிதான். எனது மனைவி பாரம்பரிய ரோமன் கத்தோலிக்கர் கிடையாது என்றால் சரிதான். அவர் ப்ரோட்டோஸ்டாண்டிலிருந்து ரோமன் கத்தோலிக்கிற்கு மாறி வந்தார்கள் என்றால் சரிதான். நான் சித்தன் தோப்பு அலங்கார அன்னை ஆலய உறுப்பினர் என்பதை காட்ட நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். என் தந்தையுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 7 பேர் ஆவர். அதில் எத்தனை நபர்கள் உயிருடன் உள்ளனர் என்றால் 4 பேர் உயிருடன் உள்ளனர். மேற்படி 4 நபர்களில் 3 நபர்கள் சொந்த ஊரில் உள்ளார்கள் என்றால் சரியல்ல.

5. மேற்படி 4 நபர்களில் நேற்றைய திருவிழாவின் போது எனது அப்பாவை தவிர அப்பாவின் சகோதரர் ஒரு நபர் மட்டும் தான் இருந்தார் என்றால் சரிதான், அவர் இங்கும் சென்னையிலும் வசித்து வருகிறார். எனது வழக்குரையில் எனது குடும்பத்தாரில் யார் யார் வெளிநாட்டிலும் வெளியூரிலும் வசித்து வருகிறார்கள் என்று தனித்தனியாக குறிப்பிடவில்லையென்றால் சரிதான். திருமுழுக்கு சடங்கை விழாவாக நடத்த போவதாக எனது உறவினருக்கு அறிவிப்பு அனுப்பவில்லையென்றாலும் அனுப்பியதற்காக எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றாலும் சரியல்ல, அறிவிப்பு அனுப்பியுள்ளேன், நீதிமன்றத்தில் தாக்கல்செ ய்யவில்லை.

6. எனது வழக்கறிவிப்பிலோ, வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ 1ம்பிரதிவாதியிடம் சென்று எனது குழந்தைக்கு குறிப்பிட்டதேதியில் எந்தெந்த உறவினர்களுடன் சென்று கலந்து ஆலோசித்தேன் என்று குறறிப்பிடவில்லையென்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதியிடம் எப்போதும் எந்த உறவினர்களுடனும் சென்று எனது குழந்தைக்கு குறிப்பிட்டதேதியில் திருமுழுக்கு விழா நடத்துவது பற்றி பேசவில்லையென்றால் சரியல்ல. நான் கேட்கும் போது 1ம்பிரதிவாதி எனக்குசிறப்பு திருப்பலி நடத்தி தருவதாக உறுதி கூறவில்லையென்றால் சரியல்ல.

7. எனக்கு திருச்சபை சட்டங்கள், ஒழுங்கு முறைகள் , மறைமாவட்ட சட்டங்கள் தெரியும் என்றால் தெரியும். எனது தந்தை 07.02.2017 முதல் 08.01.2020 வரை சித்தன் தோப்பு தூய அலங்காரஅன்னை ஆலய மேய்ப்பு பணியின் துணை தலைவராக இருந்தார்ள ன்றால் சரிதான். அவருடன் மேற்படி நிர்வாக குழுவில் செயலாளராக ெஹலன்மெர்லின் பாப்பா , துணை செயலராக ஜாக்குலின் வின்சி, மற்றும் பொருளாளராக ஆன்ட்ரூஸ் ஜெகன் ஆகியார்கள் சேர்ந்து பணியாற்றினார்கள் என்றால் பொருளாளராக ஆன்ட்ரூஸ் ஜெகன் இருந்தது தெரியும், மற்ற விவரங்கள் தெரியாது. சித்தன் தோப்பு தூய அலங்காரஅன்னை ஆலய மேய்ப்பு பணியின் பேரவையின் மற்ற உறுப்பினர்கள் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் தெரியாது.

8. பொதுவாக ஆலயங்களில் கிறிஸ்து பிறப்பு நாள், கிறிஸ்து உயிர்ப்பு நாளில் ஞானஸ்நானம் அளிப்பது வழக்கம் என்றால் சரியல்ல, கிறிஸ்து உயிர்ப்பு நாளில் ஞானஸ்நானம் கொடுப்பார்கள். நான் வேண்டுமென்றே கிறிஸ்து பிறப்பு நாளில் ஞானஸ்நானம் அளிக்க மாட்டார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். எனது தந்தை ஒரு வழக்கறிஞர் என்றால் சரிதான். வழக்கறிஞராக இருந்து பங்கு மேய்ப்பு பணியின் பேரவையின் துணை தலைவராக இருப்பதால் மேற்படி சட்டங்கள் பற்றி நன்கு கற்றறிந்தவர் என்றால் சரிதான்.

9. எனது குழந்தைக்கு திருமுழுக்கு கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்வதற்காக எந்த தேதியில் சென்னையிலிருந்து ஊருக்கு வந்தேன் என்றால் 01.11.2019 அன்று வந்தேன். 01.11.2019 முதல் 2 மாதங்களாக ஊரில் விடுமுறையில் இருந்தேனா என்றால் சரியல்ல, 2 நாட்களில் சென்னைக்கு திரும்பி விட்டேன். குழித்துறை மறை மாவட்ட சட்டம் பிரிவு 224 மற்றும் குழித்துறை மறை மாவட்ட பங்கு மேய்ப்பு பணி பேரவை விதிமுறைகளில் பிரிவு 11.1.9 ல் பங்குகளில் மாதம் இரு முறை அல்லது வாரத்திற்கு ஒரு முறை நாட்களை குறிப்பிட்டு குழந்தைகளுக்கு திருமுழுக்கு கொடுத்தல், முதல் திருவிருந்திற்கு ஒரு முறை அல்லது இரு வெவ்வேறு காலக்கட்டங்களில் சிறுவர் சிறுமியரை தயாரித்து திருவிருந்து வழங்குதல் ஆகியவை பங்கு குருவின் கடமையாகும் , அவ்வாறு நிரந்தர நாட்களை குறிப்பிடுகையில் பங்கு மேய்ப்பு பணி பேரவையோடு பங்கு குரு கலந்துரையாடி, தீர்மானம் நிறைவேற்றி அதை ஆலயத்தில்அறிவிக்க வேண்டும் என்று உள்ளது என்றால் சரிதான்.

10. எனது குழந்தைக்கு திருமுழுக்கு கொடுப்பது சம்பந்தமாக எனது தந்தை துணைத்தலைவராக உள்ள மேய்ப்பு பணி பேரவையில் கலந்துரையாடி தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லையென்றால் சரியல்ல, டிசம்பர் மாதம் கலந்துரையாடியதாக நான் கேள்விப்பட்டேன். மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. நான் கேள்விப்பட்டதாக சொன்ன விவரத்தின் அடிப்படையிலான தீர்மானத்தின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். இந்த வழக்கின் மூல ஆதாரமே மேற்படி ஆதாரம் என்றாலும் அவ்வாறான ஆவணமே என்னிடமில்லையென்றாலும் சரியல்ல.

11. எனது குழந்தைக்கு திருமுழுக்கு கொடுப்பதற்காக எப்போது சென்னையிலிருந்து வந்தேன் என்றால் 24.12.2019 அன்று வந்தேன். உண்மையிலேயே கிறிஸ்துமஸ் அன்று திருமுழுக்கு கொடுக்கும் வழக்கம் இருந்திருந்தால் அன்றைக்கு நான் திருமுழுக்கு கொடுத்திருக்க வேண்டும் என்று நினைத்தாலும் திருமுழுக்கு கொடுத்திருப்பேன் என்றால் கொடுத்திருப்பேன். நான் நீதிமன்றத்திற்கு சுமார் ரூ. 18,000 முதல் ரூ.20,000 கட்ட தகுதியானவர் என்றால் சரியல்ல. ரூ. 80,000 சம்பளம் வாங்கும் பட்டசத்தில் நீதிமன்ற கட்டணமாக ரூ. 24,000 கட்ட தகுதியானவரல்ல என்றால் சரிதான்.

12. எனது வழக்கறிவிப்பில் எனது இழப்பீடு தொகையாக எவ்வளவு குறிப்பிட்டுள்ளேன் என்றால் ரூ. 6 இலட்சம். ரூ. 6 இலட்சம் இழப்பு ஏற்பட்டிருக்கும் என்றால் ரூ- 18,000 நீதிமன்ற கட்டணம் கட்ட தகுதியில்லாதவர் என்றால் சரிதான். 27.12.2019 நடந்த உள்ளாட்சி தேர்தலில் எனது தந்தை சடையம்மங்கலம் ஊராட்சி மன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் சரிதான். எனது வழக்குரையில் 2,3 பிரதிவாதிகளை formal parties ஆக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு பதிவு செய்வதற்காக எந்த தேதியில் பிஷப்பிற்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 08.01.2020 அன்று அனுப்பினேன்.

13. 08.01.2020 அன்று ஆயரிடம் வழக்கு பதிவு செய்ய அனுமதி கேட்டு அறிவிப்பு அனுப்பினேன் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால்

சரியல்ல. வாசாஆ. 4 ல் குழித்துறை மறைமாவட்ட முதன்மை குருகுல முதல்வர் மற்றும் பிஷப்பின் மீதும் வழக்கு தாக்கல் செய்ய அனுமதி கோரியுள்ளேன் என்றால் சரிதான், 1ம் பிரதிவாதி மீதும் தாக்கல் செய்ய அனுமதி கோரியுள் ளேன். வாசாஆ. 4 ல் குறிப்பிட்டுள்ள சட்ட பிரிவு 857 பிரதிவாதிகள் மீது வழக்கு போடுவதற்காக அனுமதி கோருவதற்கான பிரிவு அல்ல என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மேற்சொன்ன சட்டங்களின்அடிப்படையில் தான் செயல்பட முடியும் என்றால் சரிதான். கீழமை நிர்வாக தலைவருக்கு மேலமை நிர்வாக தலைவர் சட்டத்திற்கு புறம்பாக ஒரு கடிதம்அனுப்பி அதை நிறைவேற்ற வேண்டிய அவசியம் கீழமை நிர்வாக தலைவருக்கு கிடையாது என்றால் சரிதான்.

14. திருச்சபை சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளில் திருமுழுக்கு, முதல் திருவிருந்து போன்ற திருச்சபை அருட்சாதனங்கள் ஒரு சடங்கே தவிர விழா கிடையாது என்றால் சரிதான். நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது போல் எனக்கு ஏற்பட்ட இழப்பினை காட்டக்கூடிய ரசீதுகளோ, ஆவணங்களையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள ஞானத்தாய் , தந்தையரை வைத்து குறிப்பிட்ட தேதியில் குழித்துறை மறைமாவட்டத்தின் திருத்தலமான தூய அந்தோணியார் ஆலயம் , சுங்கான்கடையில் வைத்து பங்கு தந்தையர்கள் ஏசுமரியான், மைக்கேல் ஆலோசியஸ், இன்னாசி ஆகியோர் நடத்திய ஆடம்பர கூட்டு திருப்பலியில் நான் நினைத்தது போல் திருமுழுக்கு சடங்கு நடைபெற்றது என்றால் நடைபெற்றது, நான் நினைத்தது போல் நடைபெறவில்லை.

15. திருவிவிலயத்தில் மாற்கு நற்செய்தியில் திருமுழுக்கு பற்றி கூறும் போது திருமுழுக்கு மிக எளிமையாக நடைபெற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி திருமுழுக்கு சம்பந்தமான விருந்து உபசரணைகள் எங்கு நடைபெற்றது என்றால் சித்தன்தோப்பு அன்னை சமூக கூடத்தில் நடைபெற்றது. வாசாஆ. 4 அனுமதி கடிதம் அனுப்புவதற்கு முன்பு குழித்துறை மறைமாவட்ட இசைவு தீர்ப்பாயத்தில் எந்த வித மனுவும் கொடுக்கவில்லையென்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மேற்சொன்ன சட்டங்களின்அடிப்படையில் தான் திருமுழுக்கு கொடுக்க முடியும் என்றும், அவரது தனிப்பட்ட விருப்பு வெருப்பின் அடிப்படையில் செயல் பட முடியாது என்றால் சரிதான்.

16. எனது குழந்தையின் திருமுழுக்கு சம்பந்தமாக எனது அணுகுமுறை சரியாக இல்லாததால் 11.02.2020 தேதியிட்ட சுற்றறிக்கை அன்றைய ஆயர் ஜெரோம் தாஸ் என்பவரால் அனுப்பப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் 11.02.2020 தேதியிட்ட சுற்றறிக்கையில் 6 வது பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்ட விதிகளை பற்றியும் தனிநபரின் வசதிக்கேற்றார் போல் நிர்ணயிக்கப்பட்ட நாளினையும் நேரத்தையும் மாற்றி அமைக்காமல் திருமுழுக்கு அளிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பிவாசாஆ. **1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

17. 2 ம்பிரதிவாதியிடமிருந்து எனது குழந்தைக்கு திருமுழுக்கு பெற கடிதம் எதுவும் நான் பெறவில்லையென்றால் சரிதான். வாசாஆ. 1 ஆவணம் 1 ம் பிரதிவாதியை சுவாதீனப்படுத்தி ஏமாற்றி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது தந்தை தான் மேற்படி நிர்வாக குழுவின் நிர்வாக தலைவர் என்பதாலும் உண்மையில் நான் நினைப்பது போல் குறிப்பிட்ட நாளில் திருமுழுக்கு கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தால் மேற்படி தீர்மான நகலை குருகுல முதல்வரிடம் கொடுத்து அனுமதி கடிதம் பெற்றிருப்பேன் என்றாலும் அவ்வாறு 1 ம் பிரதிவாதிக்கு சார்பு செய்யாமல் அனுமதி பெற்றிருப்பதால் நான் 1 ம் பிரதிவாதியை சுவாதீனப்படுத்தி ஏமாற்றி அனுமதி வாங்கியதாக கருதப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

18. நான் வழக்குரையில் கூறியுள்ளது போல் எந்த இழப்பும் எனக்கு ஏற்படவில்லையென்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு பதில் அறிவிப்பில் நிலுவையில் உள்ள சட்டங்களின் படி ஆலயத்தில் திருமுழுக்கை தனிநபர் குறிப்பிட்ட தேதியில் வைக்க முடியாது என்றும் அதற்கு மாற்று ஏற்பாடாக திருத்தலங்களில் வைக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது திருமுழுக்கிற்கு பின்பு தெரிவிக்கப்பட்டது. நான் மேற்படி விவரங்களை தெரிந்து கொண்டே 1 ம் பிரதிவாதியை கஷ்டப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான சங்கதிகளை கூறி இ ந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் எனது வழக்குரை, வழக்கறிவிப்பு, சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளபடி எனக்கு எந்த இழப்பும் ஏற்படவில்லையென்றாலும் , அதனால் தான் என்னால் இழப்பிற்கான

கணக்கையோ ரசீதுகளையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியவில்லையென்றால் சரியல்ல.

19. எனது வழக்குரை, வழக்கறிவிப்பு, சாட்சியத்தில் எனது உறவினர்கள் ஆகாய விமானம் மூலமும், ரயில் மூலமும் திருமுழுக்கிற்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் , ஆனால் அதை காட்டுவதற்கான பயண சீட்டுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். அவர்கள் திருமுழுக்கிறகு என்று வந்த தினத்தில் திருமுழுக்கு நடைபெற்றது என்றால் சரிதான். எனவே எந்த வகையிலும் எனக்கு இழப்பீடு ஏற்படவில்லையென்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட இழப்புகளை விரிவாகவும் தெளிவாகவும் எனது பிராதில் குறிப்பிடவில்லையென்றாலும் எனது வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் 1ம் பிரதிவாதி செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

**2,3** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. திருவருட்சாதனங்களை கொடுப்பது என்பது ஒரு குருவின் ஆன்மீக பணி என்றால் சரிதான். மேற்படி ஆன்மீக பணியை கொடுப்பது என்பது அவரின் ஆளுமைக்குட்பட்டது என்றால் சரியல்ல. திருவருட்சாதனங்களை பெற வேண்டுமென்றால் திருச்சபை சட்டத்தையும் மறைமாவடத்தின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் தான் பெற முடியும் என்றால் சரிதான். கோட்டாறு மறைமாவட்டத்தில் 4 திருத் தலங்கள்உள்ளது என்றால் சரிதான். மேற்படி திருத்தலங்களில் கத்தோலிக்க விசுவாசிகள் அவர்கள் விருப்பப்படும் நாட்களில் நேரத்தில் திருத்தலங்களின் அதிபர்களின் அனுமதியுடன் மத வேறுபாடின்றி யார் வேண்டுமானாலும் திருமுழுக்கு பெறலாம் என்றால் சரியல்ல.

2. நான் இந்த வழக்கில் கூறியுள்ள சங்கதிகளின் சம்பந்தமாக 2,3 பிரதிவாதிகளை நேரடியாக எழுத்து பூர்வமாக தொடர்பு கொள்ளவில்லையென்றால் சரிதான். சித்தன் தோப்பில் திருமுழுக்கு நடைபெறாது என்ற விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 24.12.2019 நள்ளிரவில் தெரிய வந்தது. சித்தன் தோப்பில் உள்ள பங்கு பேரவையில் மாதத்திற்கு ஒரு முறை தான் ஞானஸ்நானம் வழங்குவார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரியல்ல, அவ்வாறு வழங்கப்படுவதில்லை. எனக்கு 2ம் பிரதிவாதி யால் அறிவிப்பு எந்த தேதியில் அனுப்பப்பட்டது என்றால் 25.11.2019 அன்று அனுப்பப்பட்டது. வாசாஆ. 2 கடிதம் நான் பெறவில்லையென்றால் சரிதான்.

3. மேற்படி வாசாஆ. 2 கடிதத்தை நான் பெறுவதற்கு எழுத்து பூர்வமான அனுமதி கடிதம் கொடுக்கவில்லையென்றால் சரிதான். திருச்சபை சட்டத்தில் ஆயருக்கு தான் பங்கு தந்தையை வழிகாட்டும் உரிமையுள்ளது என்றால் சரிதான். எனவே வாசாஆ. 1 அடிப்படையில் எனக்கு எந்த வழக்கு மூலமும் எழவில்லையென்றால் சரியல்ல, ஆயரின் அறிவுறுத்தலின் படி மேற்படி அறிவிப்பு அ னுப்பப்படும். ஆயரை நான் நேரடியாகவும் முறையிட்டு கடிதம் கொடுக்கவில்லையென்றால் சரிதான். எனவே இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனவே எனக்கு இந்த வழக்கின் சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாத காரணத்தினால இந்த வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

4. எனக்குஇந்த வழக்கில் குறிப்பிடும் படியான எந்த இழப்பும் ஏற்படவில்லையென்றால் சரியல்ல. இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் என்ன என்றால் எனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்காக இழப்பீடு கேட்டு தாக்கல் செய்துள்ளேன். இழப்பீடு பரிகாரம் வழங்குவதற்கான எந்த வழக்கு மூலமும் எனது வழக்கில் துலங்காது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு திருச்சபை சட்டத்தின் அடிப்படையில் வழக்கு பரிகாரம் சம்பந்தமாக ஆயரிடம் ஏதேனும் மனு கொடுத்துள்ளேனா என்றால் சரிதான். அவ்வாறு எனக்கு இருந்த மாற்று நிவாரணத்தை நாடாமல் நான் நேரடியாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. திருமுழுக்கு என்பது அருட்தந்தையான 1ம் பிரதிவாதியின் ஆளுமைக்குட்பட்டது என்றாலும் அந்த அருட்சாதனத்தை நான் குறிப்பிட்ட இடத்திலும் நேரத்திலும் நடைபெற வேண்டுமென்று வலியுறுத்த முடியாது என்றால் சரியல்ல. அதனடிப்படையில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்